www.padippakam.com

Tamileelam Information
Bureau (T.I.B.)
Postfach 26
3454 Sumiswald
Switzerland

## யார் இந்த கொழும்புக் கதாநாயகன்!!! உமாபிரகாஸ்?

கடந்த 26. 01. 94அன்று மாலை கொழும்பு வத்தளைப் பகுதியில் உள்ள வனவாசல எனுமிடத்தில் வைத்து ஆயுதம் தாங்கியோரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட புளொட்டின் முன்னாள் உறுப்பினரான உமாபிரகாஸ் குறித்து தமிழீழ தகவல் நடுவ சர்வதேச ஒன்றியம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது – – –

செட்டிக்குளம் முதலியார்குளத்தைச் சேர்ந்த குலசேகரம் உமாபிரகாஸ் (ரமேஸ்) – 36 வயது – 1982காலப்பகுதியில் கழக (புளொட்) உறுப்பினர்களுடன் தன்னை இணைத்தார். கழகத்தின் அரசியல் பிரிவாக செயலர்வாசுதேவா தலைமையில் செயற்பட்ட தமிழீழ விடுதலைக் கழகத்திலும், காந்தீய அமைப்பிலும் தொண்டராக சொந்தப்பகுதியிலும் இயங்கி வந்தவர். இவர் 84காலப்பகுதிகளிலும் பின்பும் கழகத்தின் தொழிற் சங்கப்பிரிவின் வன்னிப்பிரிவில் இயங்கி வந்தார். 85காலப்பகுதியில் தொழிற்சங்கத் தூதுக் குழுவில் ஒருவராக தமிழகம் சென்று திரும்பிய இவர் 1986ல் கழகம் (புளொட்) தனது நடவடிக்கைகளை தளத்தில் இடைநிறுத்தியதான அறிவிப்போடு கொழும்பில் ஓர் நிறுவனம் ஒன்றில் காசாளராக பணி புரிந்து வந்தார். கொழும்பில் தன்னை மறைத்து வாழ்ந்து வந்த இவர் 1987பிற்பகுதியில் தோழர்கள்வாசுதேவா,கண்ணன் ஆகியோரின் படுகொலையைத் தொடர்ந்து மீண்டும் கழகத்தில் (புளொட்) தன்னை இணைத்து செயல்படத் தொடங்கினார். 1988ல் இந்தியப்படையினரால் சக கழகஉறுப்பினர்கள் சிலருடன் கைது செய்யப்பட்டு 18மாதங்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்து விடுதலையான பின்பு தொடர்ந்து கழக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இவர் 1990ஜனவரியில் கழக (புளொட்) செட்டிக்குள முகாம் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவுக்குச் சென்றார். அங்கு தமிழகத்தின் கழக நிர்வாகப் பொறுப்பாளராக செயற்பட்டு வந்த இவர் ஈபிஆர்எல்எப் பத்மநாபாவின் படுகொலையை அடுத்து கருணாநிதி அரசினால் புழல்முகாமில் சகதோழர்கள்,ஏனைய இயக்க உறுப்பினர்களுடன் தடுத்து வைக்கப்பட்டார். கழகம் (புளொட்) மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பல கழக உறுப்பினர்கள் பலவழிகளிலும் இலங்கைக்கு வந்து சேர்ந்தனர், இருந்தபோதிலும் இவர் தளத்திற்கு வருவதைத் தவிர்த்துக் கொண்டார்.

இலங்கைக்குத் திரும்ப மறுத்து தீயசக்திகளுடன் இணைந்து சமூகவிரோத நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் (புளொட்டில்) இருந்து விலக்கப்பட்ட மேற்படி உமாபிரகாஸ் பின்னர் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இருந்த தேசியப்புலனாய்வு அதிகாரி அலனின் உதவியினால் இலங்கை சென்று இலங்கை இராணுவ உளவுத்துறையின் முகவராக இணைந்துகொண்டவர். அதே உளவுப்பிரிவால் மக்கள்விடுதலைஅமைப்பு (PLO) என்ற பெயரில் இயங்கும் அங்கீகாரமும் பெருமளவுபணமும்,ஆயுதங்களும் வழங்கப்பட்டு இராணுவத் துணைப்படை அமைப்பதற்கு ஆட்திரட்டும் ஆலோசனையும் வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் ஏற்கனவே மட்டக்களப்பில் இவர் போன்றே இராணுவத் துணைப்படையாக செயல்பட்டு வந்த மோகன்என்பவரும் அவரதுசகாக்களும் இராணுவ உளவுப்பிரிவினரால் உமாபிரகாசுடன் இணைக்கப்பட்டு ஆட்திரட்டல் பணிகள் கொழும்பில் கடந்த ஆறுமாத காலமாக நடாத்தப்பட்டு வந்தன. இதன் அகோரத்தனங்கள், கொழும்பில் மர்மஆட்கடத்தல்கள் (வெள்ளைவான்மர்மம்), பணம்பறிப்பு, கப்பம்கோரல், பொலினாருக்கு கைதின்போது பணம் வசூலிப்பு போன்ற பல மக்கள்விரோத செயல்களாக எல்லை மீற ஆரம்பித்தன. இதன் வளர்ச்சி தமிழினத்தின் கருவறுப்பாக அமையும் என்ற திடமான கணிப்பே உமாபிரகாஸின் கொலை என்பது தெளிவாகிறது.

தன்னுடையதும், தான் சார்ந்த சமூகத்தினதும் விடிவுக்கு, விடுதலைக்கு, எழுச்சிக்கு, மறுமலர்ச்சிக்குப் போராட அச்சமூகம் சார்ந்த எவருக்கும் பூரணஉரிமையும், சுதந்திரமும் உண்டென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் அதேவேளை தான் மட்டுமே போராட வேண்டுமென்றோ, மக்கள்போராட்டத்தை நடத்துபவர்களைஅழிப்பதற்கோ,அல்லது மக்களைக் காட்டிக் கொடுப்பதற்கோ எவருக்கும் உரிமை கிடையாது. மீறுபவர்கள் அழிக்கப்படுவது வரலாற்று நியதி!

இலங்கைஅரசின் ஆசீர்வாதத்துடன் திட்டமிட்ட முறையில் எதிர்போராட்டம் செய்ய உளவுப்பிரிவின் துணைப்படையாக பலத்த பாதுகாப்போடு வளர ஆரம்பித்த, அனைத்துத் தரப்பினராலும் துல்லியமாக இனம் காணப்பட்ட இவ் உமாபிரகாஸ் கொலை இவர் போன்ற ஏனைய உதிரிகளின் அழிவின் ஆரம்பமென கடந்த 260194அன்று நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளது.

************************************************************

தமிழீழதகவல்நடுவம் – சர்வதேசஒன்றியம்

படிப்பகம்